RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# நெய்தற்கலிப்பாடல்கள் கூறும் - அரசர்களின் வாழ்வியல்

**கோ. நிர்மலா தேவி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பூ. சா. கோ கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641014, இந்தியா

# The Code of Kingship in the Neitharkali of Sangam Literature

**G. Nirmala Devi** [a, *]

[a] Department of Tamil, PSG College of Arts & Science, Coimbatore-641014, India

* Corresponding Author: nirmaladevi@psgcas.ac.in

**ABSTRACT**

This article examines the Neitharkali poems from the perspective of royal ethics and the ideals of kingship. According to these poems, a king, who is expected to serve as both a father and a mother to his subjects, should govern by adhering to the principles of righteousness (aram), protecting the lives and welfare of the people, and remaining steadfast in moral conduct and ethical governance. These virtues are presented as the essential foundations of an ideal ruler's way of life. Sangam literature, which emerged from the cultural milieu of the ancient Tamils who esteemed both love and valor as the twin pillars of human life, naturally embodies profound principles of ethical living. While the Neitharkali poems belong to the Akam tradition in form, they also convey important Puram-oriented ideas regarding leadership and governance by emphasizing that a ruler must never deviate from the path of justice and moral responsibility. In this context, the present study explores the ethical values and principles of kingship reflected in the Neitharkali poems, highlighting their relevance to the ideals of governance and public welfare in ancient Tamil society.

**Keywords:** Tamil society, Neitharkali poems, Governance, Akam tradition

## முன்னுரை

எந்த ஒரு இலக்கியமும் ஏதேனும் ஒரு வகையில் மனித வாழ்வியலுக்கான நெறிகளைத் தான் தோன்றும் இடம், காலம் போன்றவற்றிற்கு ஏற்ப பிரதிபலித்துக் கொண்டுதான் இருக்கும். அன்பின் அடிப்படையில் காதலையும், வீரத்தையும் இரு கண்களாகப் போற்றி வாழ்ந்த பண்டைத் தமிழர் வாழ்வினை மையமிட்டு பிறந்த சங்க கால இலக்கியங்களிலும் வாழ்வியல் நெறிகள் அமைவது இயல்பே. சமுதாயத்தை வழி நடத்துகின்ற அரசன் நெறி பிறழாது நடத்தல் வேண்டும் என்ற புறம் சார்ந்த கருத்தை நெய்தற்கலி அறிவுறுத்துகிறது. அவ்வகையில் நெய்தற்கலிப் பாடல்களில் புலனாகும் அரசர்களின் வாழ்வியல் நெறி பற்றிய கருத்துக்களை ஆராய்வது கட்டுரையின் அமைகிறது.

## நெய்தற் கலியில் அரச நெறி

நெய்தற் கலியின் முதல் பாடலில் அகத்திணையோடு புறத்திணை சார்ந்த பொருள் மரபு இயைந்து வரக்காண்கிறோம். அப்பகுதி அகக்கருத்துக்கு தடையாக இல்லை என்றாலும் புறப்பொருள் கலந்து வந்திருக்கும் நிலையில் அரசன் ஒழுக வேண்டிய நெறியை எடுத்துரைக்கக் காண்கிறோம். பிரிவிடை ஆற்றாத தலைவி மாலைப்பொழுது கண்டு அதனோடு புலம்புவது போல தோழி கேட்கக் கூறியது என்பது இப்பாடலின் துறையாகும்.

"வெல் புகழ் மன்னவன் விளங்கிய ஒழுக்கத்தால்
நல் ஆற்றின் உயிர்காத்து நடுக்குஅற தான்செய்த
தொல் வினைப் பயன் துய்ப்ப துறக்கம்

வேட்டு எழுத்தாற்போல் பல் கதிர்

ஞாயிறு பகல் ஆற்றி மலை சேர" (நெய்தற்கலி, பா 118, அடி 1-8)

பகைவரோடு போர்த்தொழில் செய்ய வல்ல ஒழுக்கத்தால் வெல்லும் புகழை உடைய மன்னன் நல்ல அறநூல் நெறியால் பல உயிர்களையும் காத்துத் தீவினையால் உண்டாகும் நடுக்கம் உள்ளத்தில் இல்லையாகும்படி, தான் செய்த பல வினையின் பயனை அனுபவிக்கச் சுவர்க்கத்தை விரும்பி போவான். அதுபோல் கதிர்களை உடைய ஞாயிறு இருளை அழித்து உலகத்துக்குப்பகற்பொழுதை உண்டாக்கிப் பின் மறையும் மலையில் சேரும். பின் கலக்கம் உடைய உலகத்தில் அம்மன்னனுக்குப் பகை மன்னன் வந்து வந்துஅவ்வுலகைக் காப்பான் போன்று தனக்கு மாறான இருளை மதி போக்க அந்தக் குடையால் நிழல் செய்து ஆண்ட மன்னனுக்கும், ஆளவரும் மன்னனுக்கும் நடுநின்ற வருத்தத்தைத் தரும் காலம் போன்று வந்துவிட்ட மாலையே! என மாலை நேரம் கண்டு வருந்தும் தலைவியின் மன நிலையை உணர்த்த முயலும் அகப்பொருள் பாடல் இது. இருப்பினும் புறப்பொருளோடு தொடர்புடைய குறிப்பாக மக்களின் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் காரணமாகின்ற அரசநெறி பற்றி இப்பாடலின் ஒரு பகுதி குறிக்கக் காண்கிறோம். மனித சமுதாயத்தை நெறிப்படுத்துகின்ற ஒரு அரசன் போராற்றல், ஒழுக்கம், நற்புகழ், அறநூல் நெறி என்று நல்லாட்சி செய்து உயிர்களைக் காக்க வேண்டும் என்ற உயர்ந்த அரச வாழ்வு நெறி இங்கே வெளிப்படக் காண்கிறோம்.

சமுதாயத்தில் வாழ்க்கை முறையைச் செம்மையுடன் அமைத்துக் கொள்ளவும் பின் தொடர்ந்து வரும் சந்ததியினருக்கு அச்சமுதாய வாழ்வில் நெறிகளைக் கொண்டு செல்லவும் வழிகாட்டுதல் என்பது மிகவும் இன்றியமையாததாகும். அவ்வகையில் வழிகாட்டுபவன் எல்லா வகையிலும் நெறி பிறழாது சிறப்புற்று விளங்க வேண்டும். இதனை சங்ககால மக்களும் மன்னர்களும் வாழ்வியலில் பின்பற்றினர் என்பதை,

"மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்" (புறம் 186)

என்ற உயர்ந்த நெறியை மன்னன் கொண்டிருந்தான் என்று புறம் சான்று பகர்கிறது. இதன் மூலம் மன்னன் நல்லவனாக இருந்தால் அவன் கீழ் வாழும் மக்களும் நலம் பெறுவர் என்ற கருத்துப் புலப்படுகிறது.

வள்ளுவரும் அரசனை நம்பி மக்கள் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதையும், போற்றினர் என்பதையும் வெளிப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் மன்னன் நெறி பிறழ்ந்தால் அவனது நிலை என்னவாகும் என்ற பிறழ் நெறியை வெளிப்படுத்துகிறார்.

இதனை,

"வான்நோக்கி வாழும் உலகுஎல்லாம் மன்னவன்

கோல்நோக்கி வாழும் குடி" (குறள் 542)

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு

இறைஎன்று வைக்கப்படும்" (குறள்388)

"இறைகடியன் என்றுஉரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்

உறைகடுகி ஒல்லைக் கெடும்" (குறள் 564)

என்ற குறள்கள் மூலம் மக்கள், மன்னனை வணங்கிய விதமும் மன்னனின் வாழ்வியல் நெறியும், பிறழ்நெறியும் வெளிப்படுகிறது.

ஞாயிறு பகற்பொழுது வந்து சேர்வதற்குக் காரணமான தன் கதிர்களைத் தன்னிடம்மீட்டு ஒதுக்கிக்கொள்வான். தன் கதிர்களைத் தன்னிடம் மீட்டுக்கணர்ந்து மறைத்தலால் நல் நீதிநூல் வழியில் உலகை நெறியில் நிறுத்தி அவ்வுலகம் ஆண்ட மன்னன் போன பின்பு நீதியல்லதனைஏற்பட்டுக் கொண்டிருந்து அறநெறியை உலகில் நிறுத்த மாட்டாத குறுநில மன்னனின் காலம் போல் இருள் உலகத்தில் வரும் பொருட்டு பகல் போதுக்கு ஓர் எல்லையான வருத்தமிக்க மாலை காலம் வந்தது. (நெய்தற்கலி பா 129)

என்று தன்னுள் கையறுஎய்திடு கிளவியால் தலைவி ஆற்றாளாயினவாறு, தோழி தலைவருக்குக் கூறியதாக என்ற துறையில் அமைந்த பாடற் கருத்து இயம்புகிறது. இங்கும் அரசன் என்பவன் மக்கள் நல்லதைக் கருத்தில் கொண்டு நீதிநெறி பிறழாதவனாக இருப்பது அரச வாழ்க்கை நெறியாக வெளிப்படுகிறது.

இவ்வகையான அரச நெறி தலைவந்து சார்தலின்நீங்கினமை கண்டு வாயில்கள் தம்முள் கூறியதாக அமைந்த நெய்தற்கலியின், 130 ஆவது பாடலில் புலப்படுவதைக் காணலாம்.

"நயனும் வாய்மையும் நன்னர் நடுவும்
இவனின் தோன்றியவை இவை என இரங்க
புரை தவ நாடி பொய் தபத்து இனிது ஆண்ட
அரசனோடு உடன் மாய்ந்த நல்வழிச் செல்வம் போல" (நெய்தற் கலி பா 130 )
"படு சுடர் மாலையோடு பைதல் நோய் உழப்பாளை
குடிபுறங்காத்து ஓம்பும் செங்கோலன் வியன் தானை
விடுவழி விடுவழிச்சென்றாங்கு அவர்
தொடுவழித் தொடுவழி நீங்கின்றாற் பசப்பே "
(நெய்தற் கலி பா 130 )

என்ற பகுதிகள் மேற்கூறிய கருத்தைச் சுட்டுவன.

வரைவு நீட்டித்துப் பகற்குறி வந்து நீங்கும் தலைவனை எதிர்பட்டுத் தோழி அவளை நாணு நெஞ்சலைப்ப வரைவு கடாயது என்ற துறையில் அமைந்த 132 ஆம் பாடலிலும் மூன்று முரசைக் கொண்டு ஆட்சி செய்யும் பாண்டியனின் ஆட்சிநெறி மதிப்பாகப் போற்றப்படுகிறது. (அடி 1 - 7) தலைவனைப் பிரிந்த தலைவி காமம் மிகுதியால் தன் துன்பத்தைப் பொறுக்க இயலாமல் ஊரார் ஞாயிறு, திங்கள் முதலியவற்றைப் பார்த்துத் தன் துன்பத்தையும் தன் தலைவனுடன் கொண்டிருந்த நீங்காத அன்பு முதல்லவற்றையும் யாவரும் கேட்குமாறு உரைக்கும் நிலை சார்ந்து.

மன்னன் தனக்குப் புகழ் உயர்வதற்காக அறிவால் மிக்க தம் அமைச்சரை முதலில் தடுத்து தக்க சொற்களைச் சொல்லிப் பின்பு ஒரு நிலையில் கொடுங்கோல் மன்னன் போல் (நெய்தற்கலி பா 146 அடி 1-5) என்ற கருத்துத் தலைவியின் கூற்றில் இடம் பெறுகிறது. அரசு நெறியிலிருந்து பிறழ்தல் கூடாது. அதாவது கொடுங்கோல் ஆட்சியின்மை வேண்டுமென எதிர்மறையில் அரச நெறியாக அமைகிறது.

இலக்கியம் அறநெறிப்பட்டதாதல் வேண்டும் என்பதற்கும் அறநெறியைப் போதிக்க வேண்டும் என்பதற்கும் நிறைய வேறுபாடுண்டு. இலக்கியப் பொருள் அறநெறி பிறழாதமையின் கற்பாரை, அது நன்னெறி நிறுத்தும் என்பது தமிழ்நூற் கோட்பாடாகும் என்ற அறிஞர் தமிழண்ணல் கருத்து இங்கு நினைப்பதற்குறியது. (சங்க இலக்கிய ஒப்பீடு இலக்கியக் கொள்கைகள்- தமிழண்ணல்,ப.30)

மனிதனுடைய இயற்கையான வாழும் பண்பாடு சுற்றுச்சூழல் ஆகியவை நெய்தல் திணைப் பாடல்களில் இடம்பெறும் விதத்தைப் பார்ப்பதன் மூலமாக இரண்டு கருத்துக்களை நாம் புரிந்து கொள்ளலாம். ஒன்று, புலவர்கள் தம்முடைய பாடல்களில் படைக்கும் கருத்துலகில், நெய்தல் நிலத்திற்கே உரிய சுற்றுச்சூழற் கூறுகளை நேர்த்தியாக ஒருங்கிணைப்பது. மற்றொன்று, அவ்வாறு ஒருங்கிணைத்த சுற்றுச்சூழற் கூறுகளின் வாயிலாக அக்கருத்துலகு பற்றிய கருத்துப் புலப்பாட்டினை நேரடியாகவோ மறைமுகமாகவோ மேற்கொள்வது. இதன் பொருட்டு மக்களின் வாழிடச் சூழலைப் புலவர்கள் கையாளும் விதம் குறிப்பிடத்தக்கது என்று தனஞ் செயன் கூறும் கருத்து இங்கு நினைத்தற்குரியது. (ஆ.தனஞ்செயன், சங்க இலக்கியமும் பண்பாட்டுச் சூழலியலும், பக்.139-140)

## முடிவுரை

ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட நெய்தற்கலிப் பாடல்களை அரச வாழ்வியல் நெறி என்ற அடிப்படையில் நோக்கிய நிலையில், மக்களுக்கெல்லாம் தாயாக தந்தையாக வாழ வேண்டிய அரசன் பின்பற்ற வேண்டிய நெறிகளாக அறநூல் நெறியில் நிற்றல், உயர்களைக்காத்தருளுதல், ஒழுக்கநெறியிலும் அறநெறியிலும் பிறழாது வாழ்தல் என்ற அறநெறிகள் வாழ்வியல் நெறிகளாக வெளிப்படுகின்றன.

## References

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004) Kalithogai, New Century Book House Pvt Ltd, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License